புதினப்பத்திரிகையாகப்
பதிவுசெய்யப்பெற்றது.

இந்துசாதனம்.

விரோதி௵ (1889)
ஆவணி௴ ௨௰௮
ஸ்தாபனம்.

THE HINDU ORGAN.

சோமவாரத்திலும் குருவாரத்திலும் பிரசுரமாகும்.

“எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு, மான்ற பெருமை தரும்.”

பத்திரக் கிரயம்.

யாழ்ப்பாணப் பட்டினம்:	௵ 1-க்கு	ரூ. 5-60
வெளியூர், இந்தியா:	,,	ரூ. 9-40
தொடுவாய்ப்பகுதி:	,,	ரூ. 9-40
தனிப்பிரதி:		சதம் 6

முற்பணம் அனுப்புவோருக்கே பத்திரிகை அனுப்பப்படும்.

விளம்பர விகிதம்.

முதன்முறைக்கு:—	ஒருகலம்	ரூ. 9-40
,,	அரைக்கலம்	ரூ. 5-00
,,	கால்கலம்	ரூ. 3-15
,,	ஒரு அங்குலம்	சதம் 65

அடுத்த முறைகட்கு டி விகிதங்களிற் பாதி.
விளம்பரங்கள் முற்பண மனுப்பினாலன்றிக் கவனிக்கப்படா.

புத்தகம்—௩௫. } யாழ்ப்பாணம்:—இரத்தாட்சி௵ ஆனி௴ ௧௰௳ (1924 ஜூன் 23) திங்கட்கிழமை. { இலக்கம்—௯௭.

உ

கணபதி துணை.

சீர்பூத்த கருவிநா னுணர்ச்சி தேங்கச்
சிவம்பூத்த நிகமாக மங்க ளோங்கப்
பார்பூத்த புறச்சமய விருள்க ணீங்கப்
பரம்பூத்த சைவநிலை பாரோர் தாங்கப்
பேர்பூத்த சிவானந்தத் தினிது தூங்கப்
பிறைபூத்த சடைமவுலிப் பிரானார் தந்த
வார்பூத்த வறிவிச்சை தொழிலென் றோது
மதம்பூத்தவிநாயகன்றாள்வணங்கிவாழ்வாம்.

வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர நாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

புத்தக விளம்பரம்.

தெல்லிப்பழை பிரமஸ்ரீ வித்துவான் சிவானந்தையரால், இயற்றிய புத்தகங்கள் என்னிடத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

1. தருக்கசங்கிரகம், நியாயபோதினி, பதகிருத்தியம், அன்னம்பட்டீயம், நீலகண்டீயம், சேர்ந்த கட்டுவிலை ரூபா 2 00
2. நம்பி அகப்பொருளுரை ரூபா 1 00
3. இரகுவமிசம் மூலமும் உரையும் முற்பாகம் ரூபா 1 சதம் 50
4. சனிதுதி விலை அணா 1
5. தசகாரியம் அணா 5

க. செல்லம்ஐயர்,
சிவன்கோவில் வடக்குத்தெரு,
வண்ணார்பண்ணை.

சண்முகநாதன் புத்தகசாலையிலும் பெற்றுக்கொள்ளலாம். (H. 26.)

1ST CLASS GOLD MEDAL AWARDED TO C. MALAYAPPA-SAMI PILLAI PALNI
BY MEDICAL CONFERENCE AND EXHIBITION MADRAS 1923
1ST CLASS AWARDED TO C. MALAYAPPA-SAMI PILLAI PALNI
BY TAMIL MEDICAL CONFERENCE AND EXHIBITION HELD IN MADRAS 1923

அநேகபரிசுகள், மெடல்கள், நற்சாக்ஷிகள் பெற்று உலகெங்கும் புகழ்பெற்றது.

25—8—1923-ல் சென்னையில்நடந்த தமிழ்வைத்தியகான்பரன்ஸ் அண்டு மருந்து கண்காக்ஷியில் பஸ்ட்கிளாஸ்(முதல்தர) தேவஔஷதக்கென தங்கமெடலும், வைத்தியபதிபட்டமும்பெற்ற

குரு தாம்பர பஸ்பம்.

முப்புவினால் தனுக்கா நீற்றியது. களிம்பற்றது. வாந்தி முதலிய கெடுதிகள் ஒன்றும் செய்யாதது, பத்தியமில்லை. வியாதிகளை விபரமாய் எழுதவும்.

பலனில்லாவிடில் பணம் திருப்பிக் கொடுக்கப்படும்.

எந்த மருந்திலும் தீராத வியாதிகள் இதில் அவசியம் தீரும். மறுமுறை வியாதி திரும்பிவாராது. இது சகல வியாதிகளையும் வேரற நீக்கும் சக்தி வாய்ந்தது.

சூலை, குஷ்டம், திமிர், ரணம், மதமதப்பு, தடிப்புகள், கிரந்திகள், பத்துக்கள், கைகால் ரணங்கள், குன்மம், மேகம், பவுந்திரம், கண்டமாலை, சூலைநீர், முதலியன நீங்கும்.

குறைநோய் சம்பந்த வியாதிகள், விரல்கள் அழுகிப்போயிருந்தாலும் சரி, அம்மட்டில் ஆறிவிடும். இது குஷ்டம், கருமேகம், வெண்மேகம், செம்மேகம் முதலியவைகளுக்கு மகா அருமையானது. இதுபோன்ற மருந்து எங்கும் கிடைப்பதரிது.

100-வேளை ரூ. 50. 50-வேளை ரூ. 25. 20-வேளை ரூ. 10.

ஏழை என்று ரூபிப்பவர்களுக்கு பாதி விலை. வி. பி. சார்ஜ் வேறு.

வீரியவிர்த்திக்கு நிகரற்ற

மன்மத கோலாகல குளிகை.

அபூர்வ சக்தி வாய்ந்தது!! ஆச்சரியமான குணமுள்ளது!!
புதிய நலத்தைக் காட்டும் போன பலத்தை மீட்கும்
ஒரு முறை பரீக்ஷிக்கவும்!! அதை இன்றே பார்க்கவும்!!

வீரியவிர்த்திக்கு இது நிகரற்றது. இதற்கு நிகரான மருந்து புவியிலெங்குமில்லை. ஒரே குளிகையில் பரீக்ஷிக்கலாம். எவ்வித பலஹீனம், நரம்புத்தளர்ச்சி, போகசக்திக்குறைவு முதலியவைகள் நீங்கி நல்ல ஜீரணம், ரத்தவிர்த்தி, வீரியவிர்த்தி உண்டாகும். வீரியக்கட்டும், இழந்த பலமும், ஆண்மையுந் திரும்ப உண்டாகும். இல்வாழ்வில் இன்பத்தைக் கொடுத்து ஊக்கத்தைத் தருவதில் இதற்கு மிஞ்சின ஔஷதமில்லை. பரீக்ஷைக்கும் பலனுக்கும் உத்திரவாதம்.

120 குளிகை ரூ. 10. 60 குளிகை ரூ. 5. 30 குளிகை ரூ. 3. மாதிரிக்கு 20 குளிகை ரூ. 2.
வி. பி. சார்ஜ் வேறு.

திருச்சி கா. மீ. மு. இப்ராம்ஸா 3-I-23-ல் எழுதுகிறார்:

தங்கள் மன்மதகோலாகல குளிகையை சாப்பிட்டதில் ரத்தத்தை சுத்திசெய்து நரம்புதளர்ச்சியை நீக்கி நல்ல பலத்தையும் வீரிய விருத்தியையும் கொடுத்து உற்சாகத்தையும் இன்பத்தையும் தருகிறது. இன்னும் 3-ரூபாய் குளிகை வி. பி. யில் அனுப்பவும்.

சித்த ஆயுர்வேத டாக்டர்
C. மலையப்பசாமி பிள்ளை,
நித்தியானந்த மெடிகல் ஹால், பழனி, S. I.

(Q. (A) 46.)

பித்தளை விளையாட்டுச் சாமான்கள்.

அழகும், பளபளப்பும் உள்ளது. இந்துக்கள் வீட்டில் சமையல் செய்யும் பாத்திரங்களைப் போன்ற வடிவுள்ளது. ஒவ்வொரு ஜோடிப்பிலும் 32 விதசாமான்கள் அடங்கியுள்ளன-

1 தெ. ஜோடிப்பு	1க்கு	ரூபா 4	அணா 8
2 தெ	,,	ரூபா 3	அணா 4
3 தெ	,,	ரூபா 2	அணா 8

கே. எஸ். முத்தையா & கம்பனி,
“ஸில்க் ஹவுஸ்” காசி.

(Y. 29.)

“ஸ்ராண்டேர்ட்”

கொழுக்கியோடுகள்.

(Standard Tiles)

பின்வரும் நியாயங்கள் பற்றியே நாம் இந்த ஸ்ராண்டேர்ட் ஓடுகளைத் தருவித்து விற்கின்றோம்:—

முதலாவது, இந்தவோடுகள்மிகப்பாரங்குறைந்தனவும்.

இரண்டாவது, இவைகள்நெடுங்காலத்திற்கு நின்று பிடிக்கத்தக்கன.

மூன்றாவது, இந்த வட இலங்கையின் தேச சுவாத்தியத்திற்கு இயைந்தவோடுகள்இவைகளேயாம். இந்த ஓடுகள்உஷ்ணகாலங்களிற்குளிர்ச்சியையும் சீதளகாலங்களில் உஷ்ணத்தையும் தரும் தன்மையன.

இந்த ஓடுகளைச் சென்ற மூன்றுவருடகாலமாக நாம் தருவித்து விற்றுவருகின்றோம். இந்த மூன்றுவருட காலத்துள் நாங்கள் ஆச்சரியப்படத்தக்க விதமாக இவை செலவழிகின்றன. மற்றும் ஓடுகளிலும்பார்க்க இது சிறந்ததென்பதற்கு இந்த ஒருநியாயமுமே போதிய சான்றாகும்.

ஓடுகள்யாழ்ப்பாணத்திலும் வல்லுவெட்டித்துறையிலும், பருத்தித்துறையிலும் எங்களிடம் பெறற்பாலன.

S. வீரகத்திப்பிள்ளை.

தந்திவிலாசம்,
“Ruby” வல்லுவெட்டித்துறை
(H. 25.)

தேக்க மரம்.

றங்கூனிலுள்ள பேர்போன அங்கிள கொம்பனியாரிடமிருந்து புதிதாக வருவிக்கப்பெற்றதிறமான தேக்கமரங்கள். நீளம் 6 அடி தொடக்கம் 30 அடி வரையிலுள்ளன. கனம் 12 அங்குலம் தொடக்கம் 20 அங்குலம் வரையிலுள்ளன. இவைகள் எம்மிடத்தில் விலைக்கிருக்கின்றன, விலைவிபரத்திற்கு எமக்கெழுதவும்.

S. வீரகத்திப்பிள்ளை,
தொண்டமானாறு.

தந்திவிலாசம்:—
ரூபி, வல்லுவெட்டித்துறை.
(H. 29.)

திறமானமங்களூர்ஓடுகள்

மெஸ்சேர்ஸ் மோர்க்கன் அன்கோ அல்வாரிஸ் அன்கோ திறமோடுகளும் அரையோடுகள், முகட்டோடுகள், காற்றோடுகள், பீலியோடுகள், கண்ணாடியோடுகள், சித்திர சகிதமானஓடுகள் தளவரிசைக்கற்கள், பூச்சட்டிகள் திறம் போட்லாந்து சிமெந்து முதலானவைகளும் சகாயமான விலைக்குப் பின்வரும் விலாசத்தாரிடம் பெற்றுக் கொள்ளலாம்.

கா. வ. சுப்பிரமணியம்,
ஓட்டுக்கம்பெனி,
தேவரீர்குளம்,
(H. 23). யாழ்ப்பாணம்.

கதிர்காம ஆடித் திருவிழா.

வருடாந்த ஆடித் திருவிழா இவ்வருஷம் ஆடி௴ 2௳ தொடங்கி ஆடி௴ 28௳ முடிவுபெறுமென்பதை இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

2. இத்திருவிழாவுக்குப் போகும் யாத்திரிகர்களுக்கு உத்தரவுச்சீட்டு(ரிக்கற்)தேவையில்லை.

3. போதிய சாப்பாட்டுச் சாமான்கள் கதிர்காமத்தில் இருக்குமென்பது அசாத்தியம். யாத்திரிகர்கள் தங்கள் சாப்பாட்டுச் சாமான்களைக் கொண்டுபோவது உத்தமம்.

4. 1924-ம் ஆண்டு வைகாசி௴ 30-ந் தேதியின் “கெசற்” பத்திரிகையில் வெளிப்படுத்தப்பட்ட விதிகளையாத்திரிகர்கள் அனுசரிக்கவேண்டும்.

W. M. Holmes,
ஊவாமாகாண அரசாட்சிஏசண்டருக்காக.

வதுளைக் கச்சேரி,
1924-ம்௵ ஆனி௴ 7௳.
(G. 404)

புத்தக விளம்பரம்.

(தபாற்செலவு வேறு).

	ரூ	சத.
பாரதம் ஆதிபருவவுரை	3	25
டி சபாபருவவுரை	2	25
டி இரண்டும் ஒரே முறையில்	5	00
தொல்காப்பியம் எழுத்ததிகாரம்-நச்சினார்க்கினியம்	4	50
டி சொல். சேனாவரையம்	4	00
அகப்பொருள் விளக்கவுரை (குமாரசுவாமிப்புலவர்பதிப்பு)	1	75
டி சிவானந்தையர் பதிப்பு	1	00
இலக்கியச் சொல்லகராதி	1	75
சித்தியார் சுபக்கம் இருவருரை	5	00
டி மு. திருவிளங்கம் பதிப்பு 4-பகுதிகள்	2	10
திருவுந்தியார், திருக்களிற்றுப் படியாருரை	0	50
தத்துவப்பிரகாசவுரை	1	75
திருக்குறள் சரவணப்பெருமாளையருரை	3	75
இரகுவமிசவுரை (முதற்பாகம்)	1	50
தருக்கசங்கிரகம்	2	00
ஜாதகபாஸ்கரன்	3	50
இராமாயணநாடகம்	2	25
இராமாயணம் பாலகாண்டம் அரும்பதவுரை	2	00

விலாசம்:— மானேஜர்,
சோதிடப்பிரகாசயந்திரசாலை,
(Q. 47.) கொக்குவில், யாழ்ப்பாணம்.

பல தலைமுறையாய் பிரபலபிரசித்தியடைந்த
வி. ஸாமி அய்யங்காருடைய

அரைக்கீரை விரைத் தைலம்

இதன்:குணம்:

பித்த மேகநீரானது சிரசுக்கேறி அதனால் கண்மறைப்பு, கண்ணெரிச்சல், கண்புகைச்சல், கண்ணிலிருந்து நீர்வடிதல், ஒருதலைவலி, இருதலைவலி, பீனிசம், காதினால் சீழ்வடிதல், காது இரைச்சல், காதுவலி, ஐந்துவருஷத்திற் குட்பட்டதாயும் இரைச்சலோடுங் கூடிய காதடைப்பு, கரப்பன், தேமல், சிரசில் மயிர் உதிர்தல், சொண்டுவிழுதல் முதலான ரோகங்களை நிவர்த்திப்பதுமன்றி மயிரை நன்றாய் வளரச்செய்யும். இந்த நோட்டீசில் காணப்படாத கழுத்திற்கு மேற்பட்ட சகல வியாதிகளையும் அனுகூலப்படுத்தும். மேற்கண்ட வியாதியில்லாதவர்கள் தேய்த்து ஸ்நானம்பண்ணினால் தேகத்திற்குக் குளிர்ச்சியையும் ஆரோக்கியத்தையுங் கொடுக்கும். வாரத்திற்கு இரண்டுதடவை காலை 8 மணிக்குள் வெந்நீரில் சீயக்காய்தேய்த்துஸ்நானஞ்செய்து யாதொரு பத்தியமுமின்றி உடனே போஜனஞ் செய்துகொள்ளவேண்டும். 8 நாள்வரையிலும் சுகந்தம் மாறாது. அன்று பகலில்மாத்திரம் தூங்கக்கூடாது. 10 பலங் கொண்ட புட்டி 1-க்கு கிரயம் ரூபா 1—10—0.

பாக்கிங் போஸ்டேஜ் பிரத்தியேகம். வெளிநாடுகளுக்கு வி. பி. இல்லாததால் முன்பணம் அனுப்பவேண்டும்.

வி. எஸ். கோமளத்தம்மாள்,
மானியுபாக்சுரர்,
8, பிராடீஸ் ரஸ்தா, மைலாப்பூர்.

(Y. 26)

ஞானோதய வாசிகசாலை.

இது யாழ்ப்பாணம் ஆனைக்கோட்டை மூத்தநயினார்கோயில் வடக்கு வீதியில் ச. பஞ்சாட்சரக்குருக்களாகிய என்னுடைய கிருகத்தில் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. இதில் 1000 ரூபா வரையிற் பெறுமதியான சைவ, வைஷ்ணவமதங்களுக்குரிய புத்தகங்கள். எவரும், எளிதில் வாசிக்கக் கூடிய ஏற்பாட்டுடன் வைக்கப்பட்டிருக்கின்றன. இதை விருத்தி செய்தற்குத் தமிழகத்தார் யாவரும் தக்க பொருளுபகரிக்குமாறு கேட்டுக் கொள்ளுகின்றேன்.

ச. பஞ்சாட்சரக்குருக்கள்,
(Mis. 490.) ஆனைக்கோட்டை.

கடிதர்கட்கு விஞ்ஞாபனம்.

"பஞ்சாங்க விபரீதம்" என்னும் மகுடநாமமிட்ட கடிதங்கள் பெற்றேம். கடித நண்பர் தமக்குநேர்ந்த சந்தேகத்தை மேற்படி பஞ்சாங்க கணிதர்களிடத்தேனும், சோதிடநூல் வல்லாரிடத்தேனும் கேட்டுத் தீர்த்துக்கொள்ளுதலேபுத்தியின்பாற்படும். இவ்வாறான விபரீதங்களைப் பத்திரிகையில் ஏற்று வெளியிடுவதனால் விளைவன விபரீதங்களும் மனஸ்தாபமும் வீண்ணோச் செலவும் இவைபோன்ற பிற அனர்த்தங்களுமேயன்றி அடையும் நன்மை யாதுமில்லையென்பது யாம் அனுபவத்திற் கண்டதாம். நண்பர் குறைகூறுதொழிவாராக. பா—ர்.

இந்துசாதனம்

யாழ்ப்பாணம்:— இரத்தாட்சிஸு
ஆனிமீ 10உ திங்கட்கிழமை.

இனியேனும் இதைக் கைவிடுங்கள்!

எங்கள் தேசத்திலுள்ள சில ஆலயங்களில் நடைபெறும் அடாத துர்க்கருமங்களில் வாணவிளையாட்டும் ஒன்று. இது காலந்தோறும் பெரும் பொருட் சேதத்தையும் பண நஷ்டத்தையும் போபத்தையும் ஜீவமோசத்தையும் விளைத்துவருகின்றது. இந்த வாணவிளையாட்டினால் அநேக ஆலயங்கள் சாம்பராயின. பல வீடுகள் எரிந்துபோயின. சிலர் உயிர் துறந்தனர். சென்ற இரண்டு மாதங்களில் இங்கு ஆலய உற்சவகாலங்களில் நடைபெற்ற வாணவிளையாட்டினால் ஒரு பெரிய வீடு சாம்பராய் எரிந்துபோயது; ஒரு வித்தியாசாலை எரிந்தது; ஒரு சிறுவன் உடனே உயிர் துறந்தான்; மூவர் படுகாயமுற்றனர். சென்றவாரம் மீசாலை அம்மன் கோவிலில் நடைபெற்ற வாணவிளையாட்டில் ஒருவன் உடனே இறந்தான்; மூவர் அன்றைக்கே இறந்தனர்; இருவர் அடுத்தநாள் வைத்தியசாலையில் மாண்டனர். சிலர் படுகாயமுற்றனர்; பலர் காயமடைந்தனர். இத்துர்ச்செயல் எமது ஆலயங்களிற் பிரவேசித்து விளைக்கும் பேராபத்துக்களையும் ஜீவமோசங்களையும் நினைக்க நினைக்க மனம் பதறுகின்றது. வாசனைபொருந்திய அன்றலர் மலர்மாலைகளை அன்புடன் சாத்தி வணங்கும் சிவசந்நிதியில் இவ்வித அக்கிரமத்தைச் செய்யலாமா? வாணத்தினால் உண்டாகும் துர்நாற்றமும் புகையும் ஒருபோதும் ஈசனுக்குப் பிரீதியாகமாட்டாவே. அதிலிருந்து எழும் கெந்தகநாற்றமும் புகையும் சிவசந்நிதானத்தை அசுசிப்படுத்திவிடுகின்றன. சனங்களுடைய கண்களையும் இனிய சுகத்தையும் நாசப்படுத்துகின்ற இந்த வாணமோ கொடிது! கொடிது!! அந்தோ!! மிகவுங் கொடிது!!!

இம்மைக்கும் மறுமைக்கும் நன்மை பயப்பது ஆலய தரிசனமல்லவா? ஆலய தரிசன வேளைகளில் இவ்வித அக்கிரமச் செயல்களினால் பேராபத்தும் ஜீவமோசமும் இன்னமும் நேருமாயின் "ஆலய தரிசனம் செய்வதினால் தீமைவிளையும்" என்ற எண்ணம் சனங்கள் உள்ளத்திற் குடிகொண்டுவிடும்; அங்ஙனமாயின் எமது ஆலயங்களின் நிலை எவ்வாறாகும்? எமது சமயந்தான் என்படும்? தமது வருவாயில் மாத்திரங் கண்ணுங் கருத்துமாக இருக்குஞ் சில குருமாரின் கதிதான் யாதாகும்? ஒரு உபயக்காரன் வாணவிளையாட்டை விரும்பினாலும் கோவில் அதிகாரி எதற்காகச் சம்மதங் கூறுவது? இவர்களிருவரும் சம்மதித்துக்கொண்டாலும், ஊருக்கு நன்மை பயக்கவேண்டி உற்சவாரம்பஞ் செய்யும் குருக்கள் தாம் கொண்ட நன்னோக்கத்துக்கு நேர்விரோதமாக மனிதரைக் கொல்லும் சங்காரத் தொழிலுக்கு மூலகாரணராயிருக்கலாமா? புண்ணியக் கிணறு வெட்டப் பூதம் புறப்பட்டமை போலவும், பிள்ளைவரம் கேட்கச் சென்று புருஷனைப் பறிகொடுத்தமை போலவும், நன்மை பெற விரும்பி ஆலய தரிசனம் செய்யச் சென்றோர் வாணவிளையாட்டினால் தமது உயிரைப் பறிகொடுக்கலாயினர். வாண விளையாட்டுக்கு அஞ்சிச் சனங்கள் மகோற்சவ தரிசனஞ் செய்யச் செல்லாது ஒழிவாராயின் அதிகாரிகள் என்செய்வது? தங்கள் அதிகாரத்தைக் கடவுளிடம் செலுத்த ஒருபோதும் முடியாது. ஆலயக் கட்டிடங்களிலும் செலுத்தமாட்டார்கள். அடியவர்கள் சுவாமி தரிசனத்தின்பொருட்டு அங்கு கொண்டுவரும் காணிக்கைப் பணத்துக்குத்தானே அதிகாரஞ் செலுத்துவது! தங்கள் அதிகாரத்திற்குக் காரணமாயிருக்கும் காணிக்கைப் பணத்தைக் கொண்டுவருவோர் வராதொழிவரேல் அதிகாரமும் அழிந்துபோகுமே! "பட்டறி கெட்டறி பத்தெட்டிறுத்தறி" என ஓர் முதுமொழி உண்டு. இந்த முதுமொழிப்பிரகாரம் வாணவிளையாட்டினால் வெகு கஷ்டங்களைப்பட்டும், பெரும் பொருள் திரவியம் உயிர் முதலியன கெட்டும் இன்னமும் அதிகாரிகளுக்குப் பகுத்தறிவு வாராமைக்கு நாம் மிகவும் வருந்துகின்றோம். மேலும் மேலும் மோசமும் நாசமும் எய்தாவண்ணம் எமது ஆலயங்களில் வாணவேடிக்கை தாசியர் நடனம் முதலான அடாத துர்ச்செயல்களை இனியேனுங் கைவிடுங்கள்!

"வாயே வாழ்த்து கண்டாய்."

"வார்கழல் வாய் வாழ்த்த வைத்து" எனவும், "வாழ்த்த வாயும் வணங்க மடநெஞ்சும்" எனவும், "அலை புனல் சேர் செஞ்சடையெம் மாதி யென்றும் ஆரூரா வென்றென்றே அலறுநில்லே" எனவும், "என்புருகிப் பாடுகின்றிலை—தெருவுதொறலறிலை" எனவும் வருவனவற்றால் இறைவனை வாயினாலே போற்றித் துதித்தல் வேண்டுமென்பது பெறப்படுகின்றது. பரமபதியாகிய சிவபெருமானை வாயினாற் புகழ்ந்து போற்றுவதற்கு எமது சமயகுரவர் பாடியருளிய தேவாரப் பதிகங்களும், திருவாசகம் முதலியனவும், திருவருட்பிரசாதம்பெற்ற மகான்களாகிய அருணகிரிநாதர் முதலியோரால் அருளிச்செய்யப்பட்ட திருப்புகழ் முதலியனவுமே இன்றியமையாதனவாகும். நாம் அப்பரம்பொருளை மறந்திருக்குந் தருணத்திலும் வாயானது இறைவனைப் போற்றித் துதிக்கவேண்டுமென்பது அருள்வாக்காகும். இக்கருத்தமையும் வண்ணமே சுந்தரமூர்த்திசுவாமிகள் "நற்றவாவுனை நான் மறக்கினுஞ் சொல்லுநா நமச்சிவாயவே" எனப் பாடியருளினர். எனவே சிவாலய தரிசனம் செய்யுங் காலங்களிலும் உற்சவ காலங்களிலும் தேவாரம், திருவாசகம், திருப்புகழ் முதலியவற்றை ஆசாரசீலராய் ஒரே மனதுடையராய் அன்புடன் ஓதுதல் அத்தியாவசியகம்வேண்டற்பாலதாம்.

காலபேதத்தினாலும் நவீன நாகரிகக் கொள்கைகளின் படையெழுச்சியினாலும் ஆலயசேவை முறைகள் ஈனதசையடைந்துள்ள இக்காலத்தில் அவற்றை நன்னிலைப்படுத்துமாறு சிரத்தை பூண்டுழைத்தல், சைவசமயிகளுடைய விசேட கடமையாகும். இத்திருத்தொண்டில் ஈடுபட்டுழைப்பவர்கள் அளவு படுத்திக் கூறுதற்கரிய பெரும் புண்ணியத்தைச் சம்பாதிப்பவராவர். "சித்தனுமெம்பிரானுடைய கோயில்புக்கு" என்பது முதலியவற்றால் தினந்தோறும் ஆலயதரிசனஞ் செய்ய வேண்டுமென்பது பெறப்படுகின்றது. அது கூடாதாயின், விசேஷ தினங்களிலேனும், உற்சவ காலங்களிலேனும் ஆலய தரிசனஞ் செய்து இறைவனை வாயார வாழ்த்துதல் வேண்டும். இதையேனுஞ் செய்ய முடியாதவர்களாய், நேர் விரோதமான முறைகளில் நாம் பிரவேசிக்கத் தொடங்கிக் கொண்டேம். ஆலயதரிசனத்துக்கு வரும் நண்பர்களுடன் நாம் அங்குச் செல்லும் நோக்கத்தை மறந்து வேறு பற்பல விஷயங்களைப்பற்றிப் பேசத் தலைப்பட்டுவிடுகின்றேம். சில சமயங்களில் தர்க்கமிடவும், பெருவாதிடவும், கலகமிடவும் முயலுகின்றேம். இதனால் நாம் சிவ சந்நிதியிற் பெருந் தீங்கிழைப்பதோடமையாது அன்புடன் தரிசனம் செய்யவரும் அடியார்களுக்கும் இடர்விளைத்து வருகின்றேம். ஒரு சிறிதும் பயன்படாத பலசில்லறைக் கட்டடச் சுவடிகளை அவிழ்த்து விரித்து எடுத்துப் பேசும் தருணம் இந்த உற்சவகாலந்தானா? இடமும் இந்த சிவாலயந்தானா? இச்சிவ சந்நிதியில் இத்தருணத்திலேனும் வீணான பசப்பு வார்த்தைகளை ஒதுக்கிவைக்க வொண்ணாதா? "சிவ சிவ" என்று சொல்ல வொண்ணாதா? தேவார திருவாசகங்களை அன்புடன் ஓத வொண்ணாதா? எம்மைப் போலக் கருவுற்று அக்கருவிற் கருப்பாசயம் உறுத்தல் முதலான ஐந்து பெரிய வேதனைகளுக்காளாகிப் பிறந்து, எம்மை ஆளும் அரசனுடைய கட்டளையை ஒரு சிறிதும் தாமதமில்லாமலும் தவறுமலும் நிறைவேற்றிவிடுகின்ற நாம் எங்கும் நிறைந்தவராயும், எல்லாம் வல்லவராயும், எல்லாம் ஆனவராயும் உள்ள இறைவனுடைய கட்டளைகளை இத்துணை அலட்சியஞ்செய்துவிடலாமா? அநித்தியமான இந்தத் தேகத்தையும் மாயமான இந்த வாழ்வையும் நம்பி ஒரு கணந்தானும் உயிர்வாழலாமா? பரம்பொருளாகிய சிவபெருமானுடைய திருநாமங்களை வாயினால் வாழ்த்தித் துதிப்பதன்றி, வாயில் வந்த வந்தபடியே அபத்த மொழிகளை விரும்பிக் கூறி அரிய பெரிய எமது நேரத்தையும் வாயையும் ஒருபோதும்வீணாக்கவொண்ணாது. துர்த்தரும் மதுபானிகளும் ஈனரும் பேசும்பொழுது ஒவ்வொரு சொல்லுக்கும் முன்னும் பின்னும் சேர்த்து உபயோகிக்கும் அருவருப்பான இழிந்தசொற்களை நாமும் கையாள வொண்ணாது. மானிட தேகத்தின் அருமையையும் பெருமையையும் உணர்ந்து பரம்பொருளாகிய சிவபெருமானை "முதுகாடுறை முக்கணனை, பேய்வாழ்காட்டகத்தாடும் பிரான்றன்னை, வாயே வாழ்த்துகண்டாய்" என்றபடி வாழ்த்துவதே எங்கள் கடனாகும்.

சமாசாரம்.

இந்துக்கல்லூரிக்கு ஓர் நன்கொடை:—குத்தகைகாரரும் பிரபல வர்த்தகருமான பிரம்படி ஸ்ரீ வே வல்லிபுரமவர்கள் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரிக்கு இரண்டாயிரம் ரூபா உபகரிக்கவிரும்பிச்சாதனம் செய்திருக்கிறாரென அறியலானேம்.

சபாபதி ஞாபகசின்னக் கூட்டம்:—இக்கூட்டம் முன்னர்க்குறித்தபடி இன்று நிகழமாட்டாதெனவும் காலமும் இடமும் பின்னர் வெளியிடப்படுமெனவும் ஷை கூட்டக் காரியஸ்தர் தெரிவிக்கின்றனர்.

யாழ்ப்பாணப்பட்டினபரிபாலன சங்கம்:—யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரிப் பிரதமாசிரியராகிய மிஸ்டர் நெவின்ஸ் செல்வத்துரை B. A., J. P., M. B. E. அவர்கள், காலஞ்சென்ற ஸ்ரீமாந். அ. சபாபதியவர்களுடைய இடத்தில் பட்டினபரிபாலன சங்க உத்தியோக அங்கத்தவராக நியமனம்பெற்றுள்ளனர்.

12 சத முத்திரை:—இலங்கையிலே வழங்கும் முத்திரைகளுள் இப்போது 12 சத முத்திரை இல்லை. அப்படிப்பட்ட முத்திரை ஒன்றைப் புதிதாய் அமைத்தற்குத் தபாற்கந்தோர்ப் பகுதியார் யோசித்திருக்கின்றனர்.

மோட்டர் அபாய நிவிர்த்தி:—யாழ்ப்பாணத்திலுள்ளவர்கள் மோட்டர் அபாயங்களை நீக்கவேண்டுமென்று விசேட சிரத்தை செலுத்திவருகிறார்கள். சென்றவாரம் இங்கு பட்டின பரிபாலன சங்கம் கூடியபொழுது இதைப்பற்றிய யோசனை நடைபெற்றது. பட்டின பரிபாலன எல்லைக்குள் நிகழும் மோட்டர் அபாயங்களை எவ்விதம் நீக்கலாமென யோசனை செய்து கூறும்பொருட்டு ஓர் சபை நியமிக்கப்பட்டிருக்கிறது.

மண்ணெண்ணெய் குடித்துமாண்டது:—பாஷையூரிலே சென்ற புதன்கிழமை இரண்டு வயசுப்பிள்ளை ஒன்று தண்ணீரென்று நினைத்து ஒருவிளக்கு நிறைய விருந்த மண்ணெண்ணெயை எடுத்துக் குடித்து மயங்கிச் சில நிமிஷங்களால் இறந்துபோய்விட்டதாம்.

தமிழாசிரியர் சங்கம்:—இத்தமீ 7உ வலிகாமம் மேற்கு தீவுப்பற்றுப் பகுதியிலுள்ள தமிழுபாத்தியாயர்களின் 2வது கூட்டம் வட்டுக்கோட்டைச் சைவாங்கில வித்தியாசாலையிற் கூடிற்று. அப்போது உபவித்தியாதரிசி ஸ்ரீ எம். தம்பிப்பிள்ளை அவர்களே சபைத் தலைவராய் இருந்து கூட்டத்தை நடாத்தினர். கூட்டத்தில் காரை நகர் ஸ்ரீ க. ஆறுமுக உபாத்தியாயர் "தசமபின்னம்" எப்படிப் பிள்ளைகளுக்கும் படிப்பிக்கவேண்டுமென்பதை முன்மாதிரிப் பாடமாகப் படிப்பித்தனர். பின் தமிழ்ப் பண்டிதர் நவாலி திரு க. சோமசுந்தரமவர்களால் "செய்யுள் படிப்பிக்கும் முறை" யைப் பற்றி உபந்நியாசஞ் செய்யப்பட்டது. பின்னேரம் சபை கூடும்போது வேலணை சைவப் பாடசாலை உபாத்தியாயர் ஸ்ரீ க. இளையதம்பியவர்கள் "வாசினை படிப்பிக்கும் முறை" யைப் பற்றி எழுதி வாசித்தனர். இது விஷயத்திற் பல ஆசிரியர்களும் தத்தம் அநுபவசித்தாந்தத்தைச் சபையில் வெளியிட்டனர். பின் சபாநாயகர் ஒவ்வோர் விஷயத்திலும் விசேட குறிப்புரைகள் கூறினர். கூட்ட ஆரம்பத்தில் முதற்கூட்ட நிகழ்ச்சியைச் சங்கக் காரியதரிசியாகும் திருவாளர் எஸ். எ. சின்னையா உபாத்தியாயர் வாசித்தனர். அடுத்த கூட்டம் ஆடி மாதம் 5-ம் திகதி கூட்டப்படுமென அறிவித்த பின் நாலரை மணிவரையிற் கூட்டம் குலைந்தது.

நீர்ப்பாய்ச்சற்பகுதி உதவிப்பரிசோதகர்ப் பரீக்ஷை:—நீர்ப்பாய்ச்சற்பகுதிஉதவிப்பரிசோதகர்களாகப் பயிற்றுவதற்குரிய பரீட்சை அடுத்த ஜூலாய்மீ 15உ வரையில் அநுராசபுரம் குருநாக்கல் வதுளை மட்டக்களப்பு என்னுமிடங்களில் நடைபெறுமென்று இந்த ஜூன்மீ 13உ வெளிவந்த கஜெற் பத்திரிகை கூறுகிறது.

கேனியாவில் தலைவரிப்பணங்கொடாமை-கீழ் ஆபிரிக்காவில் இந்திய தேசிய காங்கிரசின் அக்கிராசனாதிபதியாகிய ஸ்ரீமாந் தேசை தலைவரி கொடுக்க மறுத்ததற்காகத் தண்டிக்கப்பட்டிருக்கிறார்

நான்கு அயிரோப்பியரும் மூன்று சீனருங் கொல்லப்பட்டனர்:—இந்த ஜூன்மீ 20-ந்உ இந்துசீனாவிலுள்ள தேசாதிபதிக்கு விக்டோரியா விடுதியில் விருந்துக் கொண்டாட்டம் நடைபெற்றபொழுது அங்கு ஒரு சீனனால் வெடிக்குண்டுவீசப்பட்டது. நான்கு ஐரோப்பியரும் மூன்றுசீனரும் இறந்தனர். தேசாதிபதிக்குயாதொருகாயமும் ஏற்படவில்லை.

புங்குடுதீவு ஆசிரியர் சங்கம்:—இச் சங்கத்தின் விசேட கூட்டமொன்று இம்மாதம் க-உ (14-6-24) பின்பகல் 6 மணியளவில் புங்குடுதீவு மேற்கு மிஷன்பாடசாலையிற் கூடிற்று. சங்கத்தலைவர் ஸ்ரீ அ. நாகலிங்கம் அவர்கள் அக்கிராசனம் வகித்தார்கள். அக்தருணம் தென்னிந்தியாவில் 'எல்லூர்' என்னும் இடத்தில் மிஷனரியாயிருக்கும் கனம் J. P. அம்பலவாணர் அவர்கள் "கிழைத்தேசநாகரீகம்" என்னும் விஷயத்திலும், யாழ்ப்பாணக்கல்லூரி ஆசிரியர்களுளொருவராகிய மிஸ்டர் J. C. அமரசிங்கம் B. A. அவர்கள் "ஆசிரியர்கடமை" என்னும் விஷயத்திலும் உபந்நியாசங்கள் புரிந்தனர்.

கடிதம்.

மெக்கார்டியை நீக்கவேண்டும்:—ஓட்வியர் நாயர் வழக்கில் நீதிபதி மெக்கார்டி ஜெனரல் டையர் சரியாகவே நடந்துள்ளார். அவர் பிழைபாய்த் தண்டிக்கப்பட்டுள்ளாரென்று கூறியிருப்பதைக் கவனிக்கும்படிக்கு மிஸ்டர் ஜியார்ஜ் லான்ஸ்பரி பொதுமக்கள் கழகத்தில் தீர்மானங் கொண்டுவரப்போவதாய் நோட்டீஸ் கொடுத்துள்ளார். மிஸ்டர் நீதிபதி மெக்கார்டி நியாயவேலைகள் செய்வதற்கு தகுதியுள்ளவராயின்மையினால் அவரை நீதிபதி வேலையினின்றும் நீக்கிவிடவேண்டுமென்று சக்கரவர்த்தியைக் கேட்டுக்கொள்ளுகின்றோமென்றும் ஒரு தீர்மானங் கொண்டுவரப்போகின்றாராம்.

எமது பண்டைக்கல்வியும் ஐரோப்பியரும்:—நமது நாட்டு நாகரிகத்தின் உண்மைகளை நன்றாய் அறிந்த ஐரோப்பியர்களில் குன் ஜேம்ஸ் கஸின்ஸ் என்ற அறிஞரும் ஒருவர். ஞார் நாராயண குருகுலக்கூட்டத்தில் அவர் சில தினங்களுக்குமுன் பேசியபொழுது, நமது தேசத்துக்கல்வி மனிதரின் பரிபூரண சக்தி வெளியாவதற்குரிய சிறந்த முறையில் வகுக்கப்பட்டிருக்கிறதென்றும், வேறு எந்த நாட்டிலும் இந்த முறையில்லை யென்றும் சொன்னார். அகத்திலுள்ள தெய்வத்தைப் புறத்திலும் விளக்குவதே அதன் நோக்கம் என்றார்.

சைவப்பிரசங்கம்.

கர்தர்மட அபிமானப் பிரபுக்களால் ஓர் சங்கம் ஏற்படுத்தப்பட்டுச் சிலமாதங்களாய் வாரமொருமுறை சைவப்பிரசங்கம் நடைபெற்றுவருகின்றது. இந்த இரத்தாக்ஷிஸு ஆனிமீ 9உ ஞாயிற்றுக்கிழமை இரவு 7½ மணிவரையில் யாழ்ப்பாணம் கச்சேரி ஸ்ரீ வி. சின்னத்தம்பி முதலியாரவர்களுடைய அக்கிராசனத்தின்கீழ் நீர்வைவாசன் சிற்சபேசன் அவர்களால் வல்லாளமாகாராசன் சரித்திரம் பக்கவாத்தியசகிதமாகப் பிரசங்கம் செய்யப்பெற்றது. பிரசங்கத்திற்கு முன்னும் பின்னும் கந்தர்மடம் சிவநாமபஜனைக் கூட்டத்தினரால் இன்பரசம் பொருந்திய தேவார திருவாசகங்கள் நனகு பாராயணஞ் செய்யப்பட்டன. கூட்டம் 9½ மணிவரையில் சமாப்தியாயிற்று. இச்சங்கம் இவ்வரிய திருத்தொண்டை இடைவிடாதுசோர்வின்றி நடத்தும்வண்ணம் சிவசுப்பிரமணியப் பெருமான் கிருபைபாலிப்பாராக. —சுபமஸ்து. —கடித.

மதுரைத் தமிழ்ச்சங்கப் பரீக்ஷை.

மதுரைத் தமிழ்ச்சங்கத்தார் ருதிரோற்காரி வருஷம் பங்குனி மாதம் 26, 27, 28 (1924ஸு ஏப்பிரல்மீ 7, 8, 9)-ஆம் தேதிகளில் நடத்திய தனித்தமிழ்ப் பரீக்ஷைகளிற் றேறிப் பரிசும், யோக்கியதாபத்திரமும் பெறும் மாணாக்கர்களின் அபிதான பத்திரம்.

பண்டிதபரீக்ஷை
2-வது வகுப்பு.

ஞா. தேவநேசக்கவிவாணன், மிஷின் உயர்தரப் பாடசாலை, ஆம்பூர், வடஆர்க்காடு ஜில்லா.

பாலபண்டிதபரீக்ஷை
2-வது வகுப்பு.

இ. ராசநாயகம் தங்கம்மாள், ஸ்ரீ ராமநாத வித்யாலயம், சுன்னாகம், யாழ்ப்பாணம்.

ஆ. பொன்னுச்சாமி, தமிழ்ச்சங்கக் கலாசாலை, மதுரை.

வே. இராமநாதன், தமிழ்ச்சங்கக் கலாசாலை, மதுரை.

எஸ். சீதாராமய்யர், 198, கீழைச்சித்திரை வீதி, ஸ்ரீரங்கம்.

பிரவேசபரீக்ஷை
1-வது வகுப்பு.

ஐ. ராஜாமுதலி, மதுரைத் தமிழ்ச்சங்கக் கலாசாலை, மதுரை.

(முதற்பரிசு
ரூபா 50 பெறத்தக்க தங்கப் பதக்கம்)

2-வது வகுப்பு.

ஏ. வெங்கட்டரமணையர், தமிழ்ப்பண்டிதர், வி. சி. செக்கண்டரி ஸ்கூல், ஓமலூர்.

S. M. R. சாமுவேல் தானியேல், மதுரைத் தமிழ்ச்சங்கக்கலாசாலை, மதுரை.

A. திருமலை, மதுரைத தமிழ்ச்சங்கக்கலாசாலை, மதுரை.

A. பசுபதிஐயர், வடக்குவீதி, பந்தநல்லூர் போஸ்டு.

சா. சிதம்பரம். கரந்தைத் தமிழ்ச்சங்கம், கரந்தட்டாங்குடி, தஞ்சை.

நாராயணன், மதுரைத் தமிழ்சங்கக் கலாசாலை, மதுரை.

செ. அழகிரிசாமி, மதுரைத்தமிழ்ச்சங்கக் கலாசாலை, மதுரை.

அ. ரா. சாமிநாதபிள்ளை, வேடம்பூர், ஆலங்குடி போஸ்டு.

நூல்களைப்பற்றிய குறிப்பு.

கதிர்காம யாத்திரை:—இது கலியுகவரதராகிய சுப்பிரமணியப்பெருமான் தம்மை வழிபடும் அடியார்கட்குப் பேரருள் செய்யும்வண்ணம் விசேஷமாகக் கோயில்கொண்டருளிய புராதன திவ்வியக்ஷேத்திரமாகிய கதிர்காமத்தின் மான்மியத்தையும் வருடந்தோறும் ஆங்கு யாத்திரை செய்யும் அடியார்களின் அநுபவத்தையும் கதிர்காமவேலர் உற்சவதரிசன விசிட்டத்தையும் பிறவற்றையும் இனிதுகூறும் சிறந்த தமிழ் வசன நூலாகும். இதனை எழுதியவர் கதிர்காமவேலர்மீது பேரன்புபூண்டவரும் கிரமமாகக் கதிர்காமயாத்திரை செய்பவருமாகிய ஸ்ரீ நா. வை. தியாகராஜா அவர்களாவர். நூலிறுதியில் கதிர்காமவேலர் திருப்புகழ் முதலிய பிரபந்தங்களுட் சில செய்யுட்கள் சேர்க்கப்பட்டுள்ளன. பிரதியொன்றின் விலை சதம் 10. புத்தகங்கள் மானிப்பாய் மெய்ஞ்ஞான விலாச சபையாரிடத்திலும், வண்ணார்பண்ணை பிரித்தானிய புத்தகசாலையிலும் பெறற்பாலன.

க்ஷத்திரியன்:-இது சேலத்திலிருந்து மாதம் மும்முறை வெளிவரும் ஒரு சிறந்த பத்திரிகை. தேசமுன்னேற்றத்துக்குரிய பலவியாசங்களும் அறிவுக்குரிய விஷயங்களும் நாளுசங்கதிகளும் வரையப்பட்டுள்ளன. பிரமஸ்ரீ சு. அர்த்தநாரீச வர்மா அவர்கள் இதன் ஆசிரியராவர். இதன் வருடக்கிரயம் ரூபா ஐந்து. விலாசம்: மானேஜர், க்ஷத்திரியன் ஆபீஸ், சேலம். [எமக்கனுப்பிய பிரதிகளை உவந்தேற்றும்.

இந்திய சமாசாரம்.

சி. ஆர். தாசின்குமாரர் கைதியாக்கப்பட்டார்.

சி. ஆர்: தாசின் குமாரராகிய சித்தரஞ்சனதாஸ் 15 தொண்டர்களுடன் இந்தமாசம் 14உ தாரகேஸ்வரத்தில் சத்தியாக்கிரகம் செய்தார். அவர் உடனே கைதுசெய்யப்பட்டுச் சிரம்பூருக்குக் கொண்டுபோகப்பட்டார்.

அடுத்த அகில இந்திய மகாசனசபை அக்கிராசனர் பதவி.

இவ்வருடத்தில் நடைபெறும் அகில இந்திய மகாசனசபைக்கு அக்கிராசனர் பதவியை வகிப்பதற்கு மகாத்மா காந்தியவர்கள் உடன்படாதொழியின் ஸ்ரீமதி சரோஜினி தேவிக்கு அப்பதவி கொடுக்கவேண்டுமெனப் பம்பாய் மாகாணக் காங்கிரஸ் கொம்மிற்றி அபிப்பிராயப்படுகிறது.

மகாத்மா காந்தியும் ஸூரத்நகரசங்கமும்:

ஸூரத் நகரசங்கத்திலுள்ள 22 பிரதிநிதிகளுக்கு விரோதமாகக் கொண்டுவந்த தீர்மானத்தை எதிர்க்கும்வண்ணம் அங்குள்ள ஒத்துழையாமைக் கட்சியாரை நகரசங்க வரி கொடுக்கவேண்டாமென்று மகாத்மா காந்தி "நவஜீவன்" பத்திரிகையில் வெளியிட்டிருக்கிறார்.

லாலாலஜபதிராய் கூறுகிறார்.

பத்து வருஷத்திற்குப் பின் லண்டனிலுள்ள பிரிட்டிஷ்பார்லிமெண்டுசபையின் நடவடிக்கைகளை இப்பொழுது நேரேபார்த்த நம் லஜபதிராய் "கட்சிப்பிரதி கட்சிவாதங்களே அதில் மலிந்து கிடக்கின்றன, இதைத் தான ஜன நாயக ஆட்சிமுறை என்று அழைப்பதோ என்று அதிசயமாயிருக்கிறது. இதைத்தான் ஜன நாயக ஆட்சிமுறையென்று அழைப்பதென்றால் இத்தகைய ஆட்சிமுறையை இந்தியாவிலுள்ள நாம் அடைய விரும்புவதும் எனக்கு அதிசயமாகவே யிருக்கிறது" என்று கூறினார். அவர் கடைசியாகக் கூறுகிறார்:-"ஏகாதிபத்தியத்தை இப் பார்லிமேண்டினால் ஆள நினைப்பதானது வெறும் நாடகமேயாகும். உண்மையில் ஏகாதிபத்யமானது லண்டன் டௌனிங் தெருவிலும், ஒயிட்ஹால் மண்டபத்திலுமிருக்கும் அதிகாரிகளினாலேயே ஆட்சி செய்யப்பட்டு வருகிறது. இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சி நடைபெறுவதன்பொறுப்பை பார்லிமேண்டின் தலையில் சுமத்துவது வெறும் போலிப்பேச்சேயாகும்." இந்தியா சுயராஜ்யம் பெறுவதற்கு ஆறாயிரம் மைலுக்கப்பாலுள்ள இங்கிலாந்தை எதிர்பார்த்திருக்கும் நம்மவர்களுக்கு இது சரியான உபதேசமாகும். —"லோகோபகாரி."

மற்றொரு ஜம்புலிங்கமாம்.

தென்னிந்தியாவிலேயுள்ள திருநெல்வேலி ஜில்லாவிலே கெட்டிபொம்மையா கிராமத்தைச் சேர்ந்த கிருஷ்ணசுவாமி தேவன் "ஜம்புலிங்கத்தைப்போல்" விஷமம் செய்யவும், கொலைகள் செய்யவும், கொள்ளையிடவும் ஆரம்பஞ்செய்திருப்பதாக இராமநாதபுரம், மதுரை, ஜில்லாக்களிலிருந்து வந்த செய்தி தெரிவிக்கின்றது. ஆறு கொலைகளைச் செய்திருப்பதாகவும் தகவல் கிடைத்திருக்கிறது. ஜம்புலிங்கம் ஏழைகளிடமும் கிறிஸ்தவர்களிடமும் அநுதாபமுள்ளவனாயிருந்தமாதிரி இவன் அநுதாபங் காட்டுவதாகத் தெரியவில்லை. அரைடஜன் வாரண்டுகளுக்கு அதிகமாக அவன்மீது பிறப்பிக்கப்பட்டிருக்கின்றன. அவனைக் கண்டுபிடிக்க முயற்சிகள் செய்ய இராமநாதபுரம் திருநெல்வேலி, மதுரை ஜில்லா பொலிஸ் சுப்பரின்டென்டுகள் கூடி ஆலோசனை செய்தார்கள். அவனைக் கண்டுபிடிக்கத்திருநெல்வேலி ஜில்லாவில் ரிசர்வு போலீசார் அலைந்துவருகிறார்கள். அவனைக் கண்டுபிடிப்பவர்களுக்கு அல்லது அவனைப் பிடிக்கக்கூடிய துப்பு தெரிவிப்பவர்களுக்கு 500 ரூபா பரிசளிப்பதாகக் கவர்ன்மெண்டார் தெரிவித்திருக்கிறார்கள். அவனுடைய இரு சகோதரர்களும் அவனுடன் கூட இருக்கிறார்களாம். அவர்களைக் கண்டுபிடித்தால் தலைக்கு 100 ரூபா இனாம் அளிப்பதாகவும் கவர்ன்மெண்டார் தெரிவித்திருக்கிறார்கள் —"இந்துநேசன்"

ஒரு தேசாதிபதியின் முன்மாதிரி.

சென்னைப் புதிய கவர்னர் கோஷன் பிரபு அரசாங்கச் செலவைக் குறைக்குமாறு தமது சுற்றுப் பிரயாணங்களில் தமக்கு ஸ்பேஷல் வண்டி வேண்டியதில்லை யென்றும், மோட்டார் வண்டியிலும், மெயில வண்டியிலும் சாதாரண ரயில் வண்டிகளிலும் யாத்திரை செய்வதென்றும்தீர்மானித்திருக்கிறாராம். இது நன்று. முன்னெல்லாம் இரண்டாவது வகுப்பில் யாத்திரைசெய்துவிட்டு, உத்தியோகம் வந்தவுடன் ஸ்பேஷல் ஸலூன் வண்டிகளை நாடி ஏழைகளின் பணத்தைக் கரியாக்கும் நமது மந்திரிகள் இனி என்ன செய்வார்களோ?

ஒட்வியர் நாயர் வழக்கு.

சமீபத்தில் நடைபெற்ற ஒட்வியர் நாயர் வழக்கின் முடிவைப்பற்றி எழுதும் மகாத்மா காந்தி தற்கால அரசாட்சியை எவ்விதத்திலும் ஒழிக்க வேண்டுமென்பதற்கு இது இன்னும் ஒருகாரணம் ஆயிற்று என்று கூறுகிறார்; ஒட்வியர்வழக்கின் விபரீதமுடிவு இந்தியர்களின் சுயராஜ்யப் போராட்டத்தை அதிகப்படுத்துமென்று அன்னி பெஸண்டம்மை கூறுகிறார். ஒட்வியர் நாயர் வழக்கில் நீதிபதி டையரை ஆதரித்துப்பேசியது தவறென்று பார்லிமென்டில் சிலர் கேள்வி கேட்டிருக்கிறார்கள்.

கடிதம்.

சுபோதத் துணுக்கைகள்.

கற்பகதருவைச் சேர்ந்த காகமும் அமிர்தமுண்ணும்.

அளக்கருடுத்த அவனியின்மீது ஒருவன் முக்கியமா யெய்தும் ஊதியங்களுள் மேதாவியர் கேண்மையே மிக்க விசிட்டமுடைத்து. "அவன் அளகையாளியுங் கண்டு நாணிக் கண்புதைக்க" அட்ட ஐஸ்வரியங்களையு முடையனாயினும், அயோரைத் துணைக்கோடானாயின், இம்மை மறுமையிரண்டினுஞ் செம்மையடைய மாட்டான். உத்தமர் தங்குறைகளைப் போக்க நாடாது, "திங்கள் தனது களங்கத்தை யகற்றாது உலகிற் பொருந்திய அந்தகாரத்தை ஒட்டுவதுபோல" பிறர் அயரத்தை நீக்குவதற்கே பெரிதும் பிரயத்தனப்படுவர். தம்மோடு கேண்மைபூண்டா னொருவன் தனது விவேக சூனியத்தால், தீயொழுக்கத்தை நல்லொழுக்கமெனக் கடைப்பிடித் தொழுகுவானாயின், "உடுக்கை யிழந்தவன் கைபோல" சிறிதுங் காலாதீதமின்றி, "மகவின் கால் கைகளை அழுக்கிப் பிடித்து மருந்து புகட்டும் அன்னையைமான" ஒருசிறிதும் முகம்பாராது இடித்துரை கூறி நல்வழியுய்ப்பர். அவர்கள் வதன தரிசனமும், அவர்கள் நட்புரிமையும், அவர்கள் சீற்றமும் எஞ்ஞான்றும் நன்மை பயக்கத் தக்கன. அதுபற்றியே "கனகவரையைச் சேர்ந்த காகமும் பொன்வண்ணமாகும்" என்று ஆன்றோர் கூறியுள்ளார். நமது சகப்பிதாவாகிய சங்கரனாது சடாமகுடத்திற் பொருந்திய சர்ப்பமானது, தனது குலப் பகைவனாகிய கலுழனை விளித்து நண்ப! நின் மனைக்கிழத்தி மகார் யாவருஞ் க்ஷேமமாயிருக்கின்றார்களா? என்று குசலம் வினவியது. பொறைவேந்தனாகிய தருமபுத்திரமகாராஜனைப்பின்பற்றிச் சென்ற எளிய ஞமலியும், தேவ விமானத்திலிவர்ந்து சுவர்க்கலோகத்தை நண்ணியது. தெய்வ விக்கிரகத்தைச் சுமந்து சென்ற கர்த்தபமும் உலகரால் வணங்கப்பட்டது. இன்னும் ஓர்ஞான்று கவிச்சக்கிரவர்த்தியாகிய கம்பரோடு வாது செய்வதற்கு எண்ணி வந்த "அம்பலசோமாசி" என்னும் வித்துவான் கம்பரின் மாளிகையை அடைந்து, அங்கே எதிர்ப்பட்ட அவரது பணிப்பெண்ணை விளித்துக் கம்பர் இருக்கின்றாரா? என்று வினவ, அதனைச் செவியுற்ற பணிப்பெண் ஐயா! எனது எசமானாகிய வித்துவான் வெளியே போய்விட்டார். தங்கள் நாமதேயம் யாது? தாங்கள் இங்கே அவரைக் காணும்படி வந்த நோக்கம் யாது? என்று உசாவினள். அதற்குப் புலவனார் எனது நாமம் அம்பலசோமாசி, உனது எசமானோடு சிறிதுநேரம் இலக்கண இலக்கியங்களைக்குறித்துச் சல்லாபஞ் செய்வதற்காக வந்தேன் என்றார். உடனே அப்பணிப்பெண் அவருக்கு ஆசனமளித்து இருக்கச் செய்து, தாம்பூலம் முதலியவை யீந்து உபசரித்து வித்துவானுடைய முகக் குறிப்பைப் பார்த்து, இவர் சற்றே கல்விச் செருக்குள்ளாரெனத் தெளிந்து, ஐயா கவிசிரேஷ்டரே! ஓர் செய்யுளின் கருத்து அடியாளுக்கு விளங்கவில்லை; அதை விளக்கினால் பெரிய நன்மையாயிருக்குமெனக் கூறினள். உடனே வித்துவான் அச்செய்யுளைச் சொல்லுதி யெனக் கட்டளையிட, அப்பெண் அம்பலசோமாசியென்னுங் கவிவாணரே! "பூரணசந்திரன்போல வட்டவடிவாயிருக்கும், அக்கினிக் கொழுந்து பற்றும், தட்டுவோருடைய கையில் நின்று கூத்தாடும், கட்டுவிட்டால் அகரா என்று சொல்லப்பண்ணும், இப்பொருள் என்ன பொருளென்று நீர் ஆலோசித்துச் சொல்வதற்கு ஒருநாள் முழுதும் அவகாசங் கொடுத்தேன் ஆலோசித்துக் கூறுவீராக" என்னுங் கருத்தை யமைத்து,

"வட்டமதிபோலிருக்கும்வன்னிக்கொழுந்தாவுங்
கொட்டுவார்கையினின்றங்கூத்தாடுங்— கட்
டகராவென்னுமேயம்பலசோமாசி [டால்
யொருநாள்விட்டேனிதை."

என்னும் வெண்பாவைப் பாடினள். அதைக் கேட்ட வித்துவான் நெடுநேரம்வரை சிந்தித்தும் அவ்வெண்பாவின் சத்தார்த்தம் புலப்படாமையால், நெட்டுயிர்ப்புற்றுச் சிந்தைபலமர்ந்து, காயங்கம்பித்துக் குறுவியர்வரும்ப, வெள்ளாட்டியின் பாட்டுக்கு விடையிறுக்க முடியாது விழிக்கின்றேனே! என்று நாணமீதூர, "தன்னைக் கவிந்திருந்த கல்விச் செருக்கென்னும் அந்தகாரம் நீங்கப்பெற்று," கம்பன்வீட்டு அடிப்புங் கவிபாடுகின்றதே! என வியந்து, கம்பன்வீட்டு வேலைக்காரியே இவ்வாறு கலாவல்லபமுடையளானால், கம்பனுடைய கலாவல்லபத்தையளக்கயாரால்முடியும்! எனத்தன்மனத்தின்கண்ணேயுன்னி, அந்தோ!நமதுகதி"அளவறியாது ஆற்றிலிறங்கினவன் தன்மையை" ஒத்திருக்கின்றதே! என மதிகலங்கி, பணிப்பெண்ணைநோக்கி இக்கவியின்கருத்தை நாளைவந்து நவில்வேனெனக் கம்பர் வருவதன்முன்னே புறப்பட்டுச் சென்றனர். இச் சரித்திரத்தைக் குச்சிலிக் கடைப்புத்தகங்களிற் சிலவற்றைப் பார்த்துவிட்டு, "கள்ளித்தடிக்கு வெள்ளிப் பூணிட்டதுபோல" வித்துவப் பட்டங்களைத் தாங்களே புனைந்து, "சாவிபோன நெற்கதிரையொக்கத்" தலைநிமிர்ந்து திரியும் தம்பிமார் நோக்கக் கடவர்.

அன்பார்ந்த சகோதர சகோதரிகளே! பெரியாரையடுத்த சிறியாரெய்திய பெறுபேற்றைக் கண்டீர்களா? ஆதலால் அத்தகைய உத்தமரின் கேண்மையையே பூண்டு திரிகரணசுத்தியோடு சன்மார்க்கவழியிலொழுகிப் பிறப்பிறப்பற்றமலரகிதராகிய பரமேஸ்பரனது பாதசரோருகங்களை யடையக்கடவீர்கள். கம்பர் வீட்டுவெள்ளாட்டி பாடியகவியின் பொருள் பசுவின்சாணத்தால் தட்டப்படும் விருட்டி என்பதை இந்துசாதன வாசகர்கள் அறியக்கடவர்கள்.

ச. வைத்தியலிங்கபிள்ளை,
வண்ணைநகர்.

வாண விபத்து.

பரிதாபமான மரணங்கள்.

ஒருவன் உடனே உயிர் துறந்தான்;
மூவர் அன்றே உயிர் துறந்தனர்;
சிலர் ஆபத்தான நிலையிலிருக்கின்றனர்;
பலர் காயப்பட்டனர்.

சாவகச்சேரி மண்டுவிற் கண்ணகியம்மன் கோயிற் திருவிழாவில் நிகழும் ரக்தாட்சிஞு ஆனிமீ ௧௨ சனிக்கிழமை இரவு கொளுத்திய ஓரவிட்டுவாணம் அதிக மூச்சுடன் வெடித்து இடப்பட்ட குழலைச்சின்னபின்னமாகத் தகர்த்தமையினால் அம்மரக்குழலின்மேல் இறுக்கப்பட்ட வளையங்கள் தகர்ந்து அதிவேகத்துடனும் அததிரத்தினும் அதியுக்கிரத்துடனும் பாய்ந்து அயலிலே வேடிக்கை பார்த்துக்கொண்டு நின்ற பலரைத் தாக்கியது. அவற்றிலொரு வளையம் அதி வேகத்துடன் அயலில் நின்ற ஓர் பையனின் சிரசை நெற்றியளவிலுடைத்து அப்பால் வீசி உடனே உயிர் துறக்கச் செய்தது. மற்றை வளையங்கள் தகர்ந்து துண்டு துண்டுகளாகச் சென்று சிலரின் வயிற்றைப் பீறிக் குடல்புறப்படச் செய்தும், சிலரின் காலை முறித்தும், சிலரின் கையை முறித்தும், சிலரைப் படுகாயப்படுத்தியும், பலரைக் காயப்படுத்தியும் விட்டன. படுகாயப்பட்டோரிற் சிலர் மானிப்பாய் வைத்தியசாலைக்கும், சிலர் யாழ்ப்பாணம் அரசினர் வைத்தியசாலைக்கும், நாயன்மார்கட்டு வைத்தியசாலைக்கும் கொண்டுபோகப்பட்டனர். அவருள் மூவர் அன்றே உயிர் துறந்தார்கள். இன்னும் காயப்பட்டோரிற் சிலர் அசாத்தியமான நிலைமையிலேயே இருக்கின்றார்கள். காயப்பட்டோரின் தொகை ஏறக்குறைய நாற்பதுபேர்வரையிலிருக்கும். சுவாமியை எழுந்தருளப்பண்ணிக் கொண்டுவந்து வாகனத்திலேற்றிக் கர்ப்பூரதீபங் காட்டுஞ் சமையத்தில் இவ்வாணம் சுவாமி நின்ற இடத்திற்கு ஏறக்குறைய ஐம்பது யாருக்கப்பாலே உள்ள இடத்தில் வைத்துக் கொளுத்தப்பட்டது. சனங்களிற் பெரும்பாலார் சுவாமியின் சமீபத்தில் நின்றமையினாலேயே இவ்வளவுடன்முடிந்தது. சுவாமி வீதிவலம்வரும்பொழுது சனசமூகத்துள் வைத்துக் கொளுத்தப் பட்டிருக்குமேயாயின் இன்னுஞ் சிலர் இறந்தும் பலர் காயப்பட்டு மிருப்பார்களென்பதற்குச் சந்தேகமேயில்லை,

இப்படியான பெருஞ் சேமோசம் வாணவேடிக்கையால் இதற்கு முன் ஒருபோதும் நிகழ்ந்ததாகக் காணப்படவில்லை. இதற்குமுன் சிற்சிலவிடங்களில் சில சமையங்களில் நிகழ்ந்த விபத்துக்களில் ஒருவர் இருவரே சேதமுற்றனர். அதுவும் ஆகாயவாணங்களினாலேயே நிகழ்ந்ததாகக் கேள்வி. இச்சம்பவத்தைக் கேள்விப்பட்டோரினும், உடனின்று கண்டோரினும் சிலர் ஒரு அவிட்டுவாணத்தினால் இவ்வளவு கெடுதி சம்பவிக்க நேரிட்டமை அதிசயத்திலுமதிசயமேயென்று பேசிக்கொள்ளுகிறார்கள், இப்படியான பெரும்விபத்து நேரிட்டமையின் உண்மைக்காரணம் யாதென்பதைப்பற்றி முற்றாய் விளங்கிக்கொள்ளுதல் கூடாமையாயிருக்கின்றது. வாணம் முடித்தவர்கள் சத்தம் உரக்கக் கேட்கும்பொருட்டு வெடிமருந்தை அளவுக்கு மிஞ்சி உபயோகித்தமையே காரணமாயிருக்கவேண்டுமென்று சிலரும், மருந்துக்கலவைப்பிழையென்று சிலரும், கொட்டிற்கும் வாணத்திற்கு மிடையிலுள்ள அளவு வித்தியாசமே காரணமாயிருக்கவேண்டுமென்று சிலரும், வாணத்தைக் கொட்டிலிட்டபொழுது கீழ்மேலாக மாறியிட்டிருக்கவேண்டுமென்று சிலரும், கோயிலினுள் ஆசௌசிகள் பலர் சமுகமாயிருந்த அபராதமே காரணமாயிருந்தல் வேண்டுமென்று பலரும் பேசிக்கொள்ளுகின்றார்கள். யாம் ஆராய்ந்து பார்த்தவளவிற் கோயிலினுள்ளும் ஏறக்குறையப் பத்துப் பன்னிரண்டு பேர்வரையில் ஆசௌசிகள் சமுகமாயிருந்தனரென்பதை உண்மையாகவே காணப்படுகின்றது. இவர்களச்சமின்றி அங்ஙனஞ் செய்திருந்தமைக்குக் காரணம் தாங்கள் கோயில் மானேஜர்மாரினதும் திருவிழா உபயகாரரினதும் நெருங்கிய பந்துக்களானமையிற் றம்மைத் தடுப்பாரெவருமில்லையென்னும் அகந்தையேயாம். ஐயையோ நம்மவரின் மூடத்துவம் இருந்தவாறென்னே? நிற்க.

வாணவேடிக்கையின்பொருட்டும் தாசியர் நடனத்தின் பொருட்டும் செலவழிக்கப்படும் பொருள் அவமாயேமுடிகிறதென்றும் என் இப்பணத்தைக்கொண்டு மறுமையின்பத்தையடைதற்கேற்ற புண்ணியங்களைச் செய்துகொள்ளக்கூடாதென்றும், இவைகளினாற் கோயில்களில் அநாசாரமும் அவத்தைகளுமே கடைசிப்பயனாக முடிதலால் இவ்விரண்டும் கோயிற் திருவிழாக்களில் அவசியந் தவிர்க்கப்படல் வேண்டுமென்றும் இவ்விந்துசாதனம் முதலிய பத்திரிகைகள்எத்தனைமுறைஓலமிட்டுக்கூறின. இவைகள் ஏதாவது நம்மூரவர்களின் காதிற் கேறியதாகக் காணப்படவில்லை: வாணவேடிக்கைகளால் எக்காலத்தும் கெடுதியேயன்றி எவ்விதமான் ஒரு பிரயோசனமுமில்லையென்பது எவரும் மறுக்கொணு உண்மையாம். ஆதலினால் இவற்றைப்பற்றி ஏன் நம் சனத்தலைவர்கள் கவனஞ்செலுத்துதல் கூடாது? ஏன் நம்மரசாட்சியார் இவற்றை முற்றாயகற்றிவிடக்கூடாது: இதனால்வரும் நன்மை எட்டுணையுமில்லையே. நம்மூரவர்கள் வாணவேடிக்கைகளால் விளையும் பேரனர்த்தங்களை இப்போ கண்கூடாகக் கண்டிருக்கின்றார்கள். இனிமேலாவது இவ்வித துன்னெறிகளினீங்கி நன்னெறிகளினொழுகுமாறு பெருங்கருணைத் தடங்கடலாகிய எம்பிரான்திருவருள் பாலிப்பாராக.

இங்ஙனம்,
கடிதன்,
மீசாலை.

சுகாதாரம்.

(தண்ணீர்)

(முற்றொடர்.)

எத்தண்ணீரிலும், நாம் எவ்வளவு சிரத்தை எடுத்தபோதிலும் சொற்ப அழுக்காவது இல்லாமற் போகாது. மழைத்தண்ணீர் எல்லாவற்றிலும் சுத்தமான தண்ணீர், ஆனால் காற்றுக்கூடாகப் பெய்வதால், காற்றிலேயுள்ள தூசி முதலிய அழுக்குக்கள் மழைத்தண்ணீரை அழுக்காக்கிப் போடுகின்றன. ஒரு பெருமழை பெய்து, காற்றிலேயுள்ள அழுக்குக்கள் கழன்றதன்பின் வரும் மழைத்தண்ணீரை யெடுத்துபயோகிக்கலாம். இவையெல்லாவற்றிலும் நீராவி கட்டின தண்ணீர்தான் முறைப்படி சுத்தமான தண்ணீர். இதை வைத்தியர்கள் நோயாளிகளுக்குப் பல நோய்களையும் கண்டிப்பதற்குக் குடிக்கக்கொடுக்கிறார்கள்.

நாம் ஒவ்வொருநாளும் தண்ணீர் குடிக்கின்றோம்; சாப்பிடும் சாப்பாட்டிலும் நூற்றுக்கு 70 பாகமும் தண்ணீராகவேயிருக்கின்றது. "இப்படி நாம் உட்கொள்ளும் தண்ணீரால் அடையும் சுகமென்ன?" வென்று பார்ப்போம்.

எங்கள் தேகத்தின் வெளிப்புறமாயுள்ள தோலின் அழுக்கைத்தண்ணீரால்கழுவுகின்றோமல்லவா? அதுபோலவே, எங்கள்தேகத்தினுள்ளிருக்கும் அழுக்குக்களைக்கழுவுவதற்கும் உணவிலேயுள்ள பதார்த்தங்களைக் கரைத்து இரத்தத்தோடு சேர்ப்பதற்கும் தண்ணீர் இன்றியமையாததாயிருக்கின்றது. எங்கள் தேகத்திலே ஒவ்வொரு செக்கனும்அழுக்குக்களுண்டாகிக்கொண்டேயிருக்கின்றன. இவ்வழுக்குக்களைத் தண்ணீரே கழுவிமலமாகவும், சலமாகவும், வெயர்வையாகவும் தள்ளிவிடுகின்றது. இவற்றுள் ஒன்றாயது தடைப்பட்டால், பலவகையான ரோகங்கள் ஏற்படுகின்றன. மலம் தடைப்படுவதால் மலவரட்சி, வயிற்றுளைவு, வயிற்றோட்டம், மூலவியாதி, சமியாக்குணம் போன்ற குடல்சம்பந்தமான வியாதிகளும், சலம் தடைப்பட்டால் **அல்புமினூரியா** (Albuminuria) யூரீமியா (Uraemia), சலப்பையிற் கல்லுண்டாதல் முதலிய மூத்திரரோகங்களும் ஏற்படுகின்றன.

சலக்கருவியும், குடல்களும், சருமமும் தேஹத்திலே ஒத்துழைக்கின்றன. இவைகளில் ஒன்றாவது தடைப்பட்டு உழையாதிருக்குமானால் மற்ற இருகருவிகளையும் தாக்குகின்றது எப்படியெனின்:—தோல் அழுக்கடைந்து வெயர்வை தடைப்பட்டால் தோலின் தொழிலையும் சேர்த்து இரட்டித்தவேலையைச் சலக்கருவிசெய்கின்றது; இப்படி இரட்டித்தவேலையை நீடித்த நாட்களுக்குச் செய்துவருமாயின் கெதியில் பழுதடைந்துபோகும்: இப்படிச் சலக்கருவியும் பழுதடைந்து போனால் சலக்கருவியின் தொழிலையும் சேர்த்து இரட்டித்த வேலையைக் குடல்கள் செய்கின்றன. குடல்களும் இப்படி இரட்டித்தவேலையைச் செய்துவந்தால் கெதியில் பழுதடைந்து போகும். இக்கருவிகள் பழுதடையாது ஒத்துழைத்து எங்கள் உடம்பைச் சௌக்கியமாய் வைத்திருத்தற்கு நாள்தோறும் நாம் போதிய சலத்தைச் சாப்பிட்டுவரவேண்டும். எவ்வளவுக்குச் சலத்தைச் சாப்பிடுகின்றோமோ அவ்வளவுக்குத் தேஹத்திலேயுள்ள அழுக்குக்கள் நீங்குகின்றன. இப்போ பாருங்கள் மலவரட்சியென்பது-மலம் தண்ணீர்ப் பிடிப்பில்லாமையால்வரண்டுபோய்த்தடைப்பட்டிருப்பதென்று அர்த்தம், "அப்போ வைத்தியர்கள் என்ன சொல்லுகிறார்கள்?" என்றால் நல்லதண்ணீரை அதிகமாய்ப் பருகுவதால் மலம் வரட்சியடையாது கழுவப்பட்டுப் போகின்றது. இதுபோலவே, ஓர் கர்ப்பிணிக்குத் தேஹத்திலே வீக்கம் உண்டானால் வைத்தியர்கள் அதிகமான தண்ணீரைச் சாப்பிடச் சொல்கின்றார்கள். ஏனெனில், அதிகமான மூத்திரமாய்ப்போகின்றது. இப்படி அதிகமாய்ப் போகும் மூத்திரம், தேஹத்திலே வீக்கத்தை உண்டாக்கின் அழுக்குக்களைக்கழுவிக்கொண்டு போகின்றது. இப்படி மூத்திரம் அழுக்கைக்கழுவிக்கொண்டுபோவதால் வீக்கம் வடிகின்றது.

பொதுவாகத் தேஹத்திலே நோய் அழுக்கினால் உண்டாவது. அழுக்கைப் போக்குவது சுத்தமான தண்ணீர். ஆகையால் நாம் சுத்தமான தண்ணீரை நாள்தோறும் அதிகமாய் குடிக்கவேண்டும். ஒரு நாளைக்கு 40 அவுன்சுக்குக்குறையாது அருந்துதல்வேண்டும்.

தண்ணீரை எப்பொழுதும் அருந்திக்கொள்ளலாம்-உண்ணும் பொழுதும், உண்பதற்கு முன்னும் பின்னும் அருந்தலாம். அதனால் யாதாமொரு தோஷமும் வராவாம். படுக்கைக்குப் போகும் பொழுதும், படுக்கையைவிட்டெழுந்திருக்கும் பொழுதும் தண்ணீரைக் குடித்துவருவது அதிக உத்தமம்.

S. M.
பகான்.

விளம்பரம்.

காங்கேயன்துறை ரேகில் இருக்கும் மரக்காலையில், கீழே குறிக்கப்பட்ட மரங்கள் வருகிற ஆடிமீ 23உ புதன்கிழமை முற்பகல் எட்டரை (8-30) மணிக்கு பிரசித்த ஏலத்தில் யாழ்ப்பாணம் காட்டேசண்டுத்துரை அவர்களால் விற்கப்படும்.

1. 80 முதிரை
2. ஒருதொகை முதிரைக்கொப்புக்கள்
3. 100 சவண்டலை
4. ஒருதொகை கழிவு சவண்டலை

J. D. SARGENT,
வனபரிபாலனர்.

கண்டி, காட்டுக்கந்தோர்,
ஆனிமீ 16உ 1924ஆ.
(G. 406.)

விளம்பர மறுப்பு.

கைதடி நாவற்குழி குடி சிதம்பரநாதர் சின்னத்தம்பி பெண் சின்னம்மா ஆகிய நான் எல்லாசொத்தாரிசமாருக்கும் மற்றுமுள்ளோருக்கும் இதனால் தெரிவிப்பது யாதெனில் எனது தகப்பனாராகிய ஆறுமுகம் சின்னப்பா எனக்குக் குணபேதமென்றும் என் புருஷன் சிதம்பரநாதர் சின்னத்தம்பி யென்பவர் என்னை அனுப்பி முன் ஒருகொள்விலைக்காணியைவிற்று விட்டாரென்றும் இப்போதும் என் சீதனக்காணியைத்தன்பேருக்கு எழுதுவித்தற்கு என் புருஷன் ஆயத்தப்படுத்துகிறாரென்றும் இந்து சாதனம் 90-ம் 91-ம் 92-ம் இலக்கப் பத்திரிகைகளில் விளம்பரப்படுத்தியிருக்கின்றார். எனக்கு எவ்வகையான குணபேதமும் இல்லையென்றும் கொள்விலைக்காணியை நானும் மனமொத்து விற்றதேயன்றி அனுப்பி விற்கவில்லையென்றும் என்சீதனக்காணியைத் தன்பேருக்கு எழுதுவித்தற்கான நோக்கம் அவரிடத்திலே அற்பமேனும் இல்லையென்றும் இதனால் சகலருக்குந் தெரிவிக்கின்றேன்.

இப்படிக்கு,
சி. சின்னம்மா.

கைதடி-நாவற்குழி,
20-6-24.
(Mis. 502.)

[குறித்த சின்னம்மா. இவ்விளம்பர மறுப்பை எமது சமுகத்திலேயே எழுதிக் கைச்சாத்திட்டுள்ளனர். அச்சமையத்து யாம் ஆராய்ந்தவரையில் மேற்படி சின்னம்மாவிற்கு யாதுங் குணபேதமிருப்பதாகக் காணவில்லை. மேலும், எவ்வகையான குணபேதமுமில்லையென யாழ்ப்பாணம் டக்டர் ஸ்ரீ சிவசிதம்பரமவர்கள் ஒருஅபிப்பிராயபத்திரம் (சேர்டிவிக்கற்) கொடுத்திருக்கின்றார்.

—பத்திரிகாசிரியர்.]

இனாம்! இனாம்!! இனாம்!!!

இதனடியில் கண்ட மருந்து வாங்குகிறவர்களுக்கு மட்டில்

வைத்திய சாஸ்திரத்தில் அதிக அனுபவமுள்ள ஹக்கீம் K. முகம்மது யூசுபு அவர்களால் செய்யப்பட்ட (வைத்திய சாஸ்திர நீதிநூல்) 96 பக்கம் அடங்கிய புஸ்தகம் ஒன்று இம்மருந்துடன் இனாமாக அனுப்பப்படும். மானிட சரீரத்தில் பரவும் பல நோய்கள் வீரியபலஹீனங்கள் நரம்புத் தளர்ச்சிகள் வீரிய நஷ்டத்தின் விபரங்கள் அது ஜனித்த காரணங்களையும் அதன் குணங் குறிகளையும் அதற்கு மருந்தும் பரிகாரமும் சரீரத்தில் உள்ள சில ரகசியமான விஷயங்களையும் வைத்தியரிடம் வெளிப்படுத்தாமல் தனக்குத் தானே அறிந்துகொள்ளக்கூடிய அருமையானதோர் சாஸ்திரமாயிருக்கின்றது.

அவுஷதங்களில் அருமையான வித்தை.

ஜெகப்பிரசித்தி பெற்ற

சிட்டுக்குருவி அமிர்த லேகியம்.

பலமில்லாமல் தளர்ந்து சோர்வடைந்த நரம்புகளையும் உலக வாழ்க்கையில் பிரியமில்லாமல் சஞ்சலப்படும் மனதையும் ஒருவேளை லேகியம் சாப்பிட்ட பிறகு ஆச்சரியப்படும்படி நரம்புகளுக்குப் பலமும் திமிரும் உண்டாக்கும்.

பரீட்சைக்கும் பலனுக்கும் உத்திரவாதமுள்ள உண்மை அவுஷதம்
குணமில்லையென்று ரூபிக்கிறவர்களுக்கு பணத்தைத் திருப்பிக் கொடுக்கப்படும்.

வீரியபுஷ்டியையும் மன உற்சாகத்தையும் கொடுப்பதில் இதற்குச் சமமாய் எதைக் காட்ட முடியும். இதனை அனுபவித்தவர்கள் இப்பெருமை தங்கிய மருந்திற்கு உள்ள அபூர்வசக்தியைப் போலே இவ்வுலகத்தில் வேறு எந்த மருந்திற்கும் இல்லையென்று அனேக நற்சாக்ஷிப் பத்திரங்கள் எழுதியிருக்கிறார்கள்.

அன்பனே! இதுவரையிலும் வீரியதத்துவத்திற்காகவும் நாடி நரம்புகளின் உற்சாகத்திற்காகவும் மூளையைப் பலப்படுத்தி ஞாபகசக்தியை விர்த்திசெய்யவும் தேககாங்கையினால் நீற்றுப்போகும் பலஹீனம் பற்பல வாய்வுரோகம் இடுப்புவலி கைகாலசதி மலச்சிக்கல் பசிமந்தம் இவைகளுக்கெல்லாம் எத்தனையோ விதமான அவுஷதங்கள் சாப்பிட்டிருப்பீர்கள். அவைகளுக்கெல்லாம் இது முதல்தரமான மருந்தென்று தங்களின் சினேகிதர்பால் புகழ்ந்து பேசுவீர்கள். பத்தியமில்லை.

முக்கிய கவனிப்பு:—சில போலி சிட்டுக்குருவி லேகியங்கள் ஆயிரக்கணக்கான ரூபாய் இனாமென்று சபதங்கள் கூறிக்கொண்டு பல விளம்பரங்கள் வெளிவந்துகொண்டிருக்கிறபடியால் எமது விலாசத்தைக் கவனித்து ஆடர் செய்யவேணும்.

40 நாள் 80 வேளை டப்பி 1க்கு விலை ரூபா 10—0—0
20 ,, 40 ,, ,, ,, ,, 5—0—0
10 ,, 20 ,, ,, ,, ,, 2—8—0.

வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

இந்தியா, பர்மா, சிலோன் இம்மூன்று தேசங்களுக்கும் வி. பி. யில் மருந்து அனுப்புவோம். பினாங்கு, சிங்கப்பூர், மற்ற மலாய் தேச வாசிகள் மருந்தின் கிரயமும், பார்சல் செலவு ரூபா 2ம் சேர்த்து முன்பணம் அனுப்பினால் மட்டில் மருந்து அனுப்பப்படும்.

விலாசம்:

ஹக்கீம் கா. முகம்மது யூசுபு,
முகம்மதியா வைத்தியசாலை,
பறங்கிப்பேட்டை, (தென்னாற்காடு ஜில்லா)

Hakeem K. Mohamed Yoosoof,
Mohamedia Medical Hall,
Porto-Novo, S. A. Dt. (INDIA.)

(H. 27.)

---

4 மாசத்தில் 200 குஷ்டரோகிகள் சொஸ்தமடைந்து விட்டார்கள்!
திமிர், குஷ்டம், தீர்ந்து விட்டன!
மதமதப்புமாரி சொரணையுண்டாகி விட்டன.
தடிப்புகள் மாறிவிட்டன, பத்துகள் மறைந்து விட்டன,
சொரிகள் உதிர்ந்து விட்டன, அரிப்புகள் மாறிவிட்டன,
ரணங்கள் ஆறிவிட்டன,
குன்மம், கிரந்தி, மேகமெல்லாம், தீர்ந்து, விட்டதென்று தினம்
நற்சாக்ஷிகள் வந்தவண்ணமாயிருக்கின்றன.
ரிஜிஸ்டர் செய்யப்பட்டது.
அநேக நற்சாட்சிகளும் தங்கமெடலும் பரிசு பெற்று
உலகமெங்கும் புகழ்பெற்ற மருந்துகள்.

25-8-1923-ல் சென்னையில் நடந்த வைத்திய கான்பரன்ஸ் மருந்து வைத்திய கண் காட்சியில் இவர் மருந்துகள் பஸ்ட் கிளாஸ் தேவ ஔஷதங்களென்று தங்க மெடலும் வைத்திய ஆசிரியர் என்று பட்டமும் பெற்றவர்.

எந்த மருந்திலும் தீராத வியாதிகள் இதில் அவசியம் தீரும். உத்தரவாத முள்ளது. குணம் இல்லை என்பவர்களுக்கு பணம் திரும்பக்கொடுக்கப்படும். வைத்திய சாஸ்திரத்தில் மகா நிபுணர்: முப்புவைக் கண்டுபிடித்தவர்.

தாம்பர பஸ்பம்.

சகல வியாதிக்கும் கைகண்டது.
முப்புவினால் தளுக்கற நீற்றியது. களிம்பற்றது.
வாந்தி முதலிய கெடுதிகள் ஒன்றும் செய்யாதது பத்தியமில்லை.
வியாதிகளை விபரமாய் எழுதவும்.
உங்கள் வியாதிகளை மறுமுறை திரும்பிவராமல் நிவர்த்திக்கும் வல்லமை யுடையது.

20-வருஷ காலமாய் அனேக வியாதிகளுக்குக்கொடுத்து அனுபவமுள்ளது. இந்த மருந்தினால் தீராத வியாதிகள் கிடையாது. சகல வியாதிகளுக்கும் இந்த ஒரே மருந்து போதும்! ஒருமருந்துக்கும் வசப்படாத வியாதிகளெல்லாம் இந்த மருந்தில் தீருவது வெகு ஆச்சரியமாக இருக்கிறது. திடீரென்று சம்பவிக்கக் கூடிய ஆபத்தான சகல வியாதிகளையும் யாவரும் பிரமிக்கும்படி வெகுசீக்கிரத்தில் நிவர்த்திக்கும், சிக்கிரத்தில் குணப்படுத்துகிறதை பார்க்கும்போது மிகுந்த ஆச்சரியத்தைக் கொடுக்கிறது. ஜுரம் 64-ஜன்னி 13-தோஷம் 7-ம் ஜாஸ்தியாகி எந்த மருந்திலும் தீராத சமையம் உட்கொண்டால் அந்த க்ஷணமே நிறுத்தும் 3-நாள் மருந்தே போதும். வெகு சீக்கிரம் பிரமிக்கும்படி வாய்வு 300-ம் இதில் அவசியம் தீரும்; வைத்தியர் தேவையில்லை. மேக நீரினால் பொறுக்கமுடியாத கைகால் குடைச்சலை உடனே நிறுத்தும். குறை நோய் சம்பந்தமான ஆராதமணங்களும், விரல்கள் அழுகிப்போயிருந்தாலுஞ்சரி அந்தமட்டில் புண்கள் ஆறிவிடும். பின் புண்ணாகாது. எந்த மருந்திலுந் தீராத எவ்வளவு நாள்பட்ட கிரந்தி, புண் புரைகளும் இதில் அவசியந் தீரும்; வெட்டை, முத்திமொழிகளில் சூலை, வீக்கம், வலி, கை கால் குடைச்சல் ஊரந்தி, நரைச்சல், மேகஊரல், பத்து, அரிகிரந்தி, தடிப்பும் நரம்பு பிடித்து கை காலை முடக்கிவிடும் மேக வியாதிகளும் இதில் அவசியம் தீரும். ஜுரம், 64 ஜன்னி, 13 தோஷம், 7 வாயு, 26 மேகம், 21 குஷ்டம், 18 சூலை, 18 கிரந்தி, 6திமிர், 10 குன்மம், 8 இருமல், 8 க்ஷயம், 6 காசம், 8 மூலம், 9 பவுந்திரம், அரையாப், 8 கண்டமாலை, 9 திராணி, 6 விஷநீர், 4 விக்கல், 8 வெடிப்பு ரணம், வெள்ளை, வெட்டை, சுந்திமேகம், எரிச்சல், கடுப்பு, நீரடைப்பு, கல் அடைப்பு, ஆறுதபுண், புரை, குழிபுண், புற்றுக்கட்டி, பிளவை, காக்கை வலிப்புகள், பக்கவாதம், நடுக்குவாதம், மதமதப்பு, சூதகவாய்வு, வயிற்றுவலி முதலியசகலவித கர்ம வியாதிகளும் கண்டிப்பாய்த் தீரும். அனுபவத்தில் கை கண்ட அருமையான மருந்து. 80 வேளை ரூபா 40; 40 வேளை ரூபா 20; 20 வேளை ரூபா 10; ஏழைகட்கு பாதி விலை.

வைத்திய ஆசிரியர்.
R. M. K. வேலுசாமிபிள்ளை,
சித்த ஆயுள்வேத வைத்யசாலை, பழனி.

(Y. 31.)

உங்கள் குழந்தைகளுக்கு

லக்ரோஜின்

என்னும்
இயற்கையான பாலுணவை ஊட்டி
நன்மையடையுங்கள்.
இந்தப் பாலுணவே
முலைப்பாலுக்குச் சமானமானது.
இது
தசையையும் என்புகளையும் விருத்தி செய்யும்
சக்திவாய்ந்தது.
இந்த உணவை உண்டு வளர்ந்த குழந்தைகள்
இறுக்கமான தசைநார்களும்
அரோகதிடகாத்திரமு முடையவர்களாய்
இருக்கிறார்கள்.

லக்ரோஜின்

சவலைகளைப் பராக்கிரம முடையவராக்கும்.
இந்த உணவை
இலங்கையிலுள்ள ஔஷதசாலைகளிலும்
கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.
மேற்படி இடங்களில் கிடைக்காவிடில்
நேரே எங்களுக்கு எழுதுங்கள்.
மாதிரி லக்ரோஜின் உணவும் அதின் விபரங்களடங்கிய புத்தகமும்
உடனே அனுப்பப்படும்.

பிறீ
கூப்பன்.
H. O.
(Q. 49.)

நேஸ்லின் & அங்கிளோ சுவிஸ்
கொன்டேன்ஸ்ட் மில்க் கோ.,
தபாற்பெட்டி, 189,
கொழும்பு.

தயவுசெய்து உங்கள் அரிய புத்தகத்தில் (Baby Book) ஒன்றும், மாதிரி லக்ரோஜின் உணவும் கிரயமின்றி அனுப்பவும்.

பெயர்:— ....
விலாசம்:— ....

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன், கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க, நான்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்விமல்க, மேன்மைகொள் சைவ நீதி விளங்குக வுலக மெல்லாம்.

Printed and published by S. Ampikaipagan, for the Proprietors at the Saiva Prakasa Press, Jaffna.